# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்: | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. இசைக் கலைபற்றி நுணுக்கமாகக் கூறும் நூல்

அ) மணிமேகலை　　ஆ) சிலப்பதிகாரம்

இ) குண்டலகேசி　　ஈ) வளையாபதி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

2. போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் தலை வணங்காமல் ஆட்சிசெய்த மன்னன்

அ) பண்டாரவன்னியன்　　ஆ) எல்லாளன்

இ) கயிலைவன்னியன்　　ஈ) சங்கிலியன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

3. பறவைகள் கூட்டங்கூட்டமாகப் பறந்து சென்றன. இங்கு பறந்து என்பது

அ) வினைமுற்று　ஆ) வினையெச்சம்　இ) பெயரெச்சம்　ஈ) வினையடி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

4. எத்தகைய துன்பம் வந்தாலும் தம் நல்லியல்புகளிலிருந்து மாறாத பண்புடையோர்

அ) நல்லோர்　ஆ) தீயோர்　இ) சிறியர்　ஈ) அறிவிலோர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

5. பின்வருனவற்றுள் அடுக்குத்தொடர்

அ) சலசல　　ஆ) அல்லும்பகலும்

இ) சின்னச்சின்ன　　ஈ) குடுகுடு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

6. **மண், விண், நீர், தீ, வளி** என்பன

அ) ஐம்புலன்கள்　ஆ) ஐம்பூதங்கள்　இ) ஐம்பொறிகள்　ஈ) ஐம்பால்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

7. மருதுபாண்டியன் வாழ்ந்த ஊர்

அ) இராமையாபுரம்　ஆ) தோமையாபுரம்　இ) கந்தபுரம்　ஈ) எட்டயபுரம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

8. எழுதினர் என்ற வினைச் சொல்லின் வினையடி

அ) எழுது　　ஆ) எழுதி　　இ) எழு　　ஈ) எழுதிய

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

9. மதங்கசூளாமணி என்ற நூலை எழுதியவர்

அ) இளங்கோவடிகள்　　ஆ) விபுலாநந்தஅடிகள்

இ) மறைமலையடிகள்　　ஈ) தனிநாயகம்அடிகள்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

10. ஏழிசைகள் பற்றிய செய்திகளைக் கூறும் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களில் ஒன்று

அ) நல்லூர்　　ஆ) அரசலூர்　　இ) நவாலியூர்　　ஈ) கோவிலூர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

11. இலக்கிய இன்பம் என்ற பாடத்தில் வாளைமீன் எகிறிப் பாய்ந்தது

அ) பலாவில்　　ஆ) இஞ்சியில்　　இ) கமுகில்　　ஈ) மஞ்சளில்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

12. மழை பெய்யாததனால் குளங்கள் ____________ வெடித்துக் காணப்பட்டன.

அ) பாளம்பாளமாக　　ஆ) அணிஅணியாக

இ) பாறைபாறையாக　　ஈ) அரைகுறையாக

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

13. காராளர் என்ற சொல் குறிப்பது

அ) புலவரை　　ஆ) அறிஞரை　　இ) மறவரை　　ஈ) உழவரை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

14. கஞ்சக்கருவிகளில் ஒன்று

அ) நாதசுரம்　　ஆ) புல்லாங்குழல்　　இ) கைத்தாளம்　　ஈ) வீணை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

15. அரசன் என்ற சொல்லின் எதிர்ப்பாற் சொல்

அ) புலத்தி　　ஆ) அரசி　　இ) இடைச்சி　　ஈ) செல்வி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

16. கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கன் நட்புக்கொண்டிருந்த மன்னன்

அ) எல்லாளன் ஆ) கயிலைவன்னியன்

இ) குலசேகரமுதலியார் ஈ) நரசிங்கன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. மன்னன் தன்னாட்டு ஏழை மக்களுக்குப் பொருள் வழங்கினான்.
இச் சொல்லின் நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) மன்னன் ஆ) வழங்கினான் இ) தன்னாட்டு ஈ) மக்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. குழந்தையின் ________________ அற்ற சிரிப்பைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கும்.

அ) கள்ளங்கபடம் ஆ) மேடுபள்ளம் இ) அல்லும்பகலும் ஈ) ஏற்றஇறக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. **வன்னிக்குறிப்பு** என்னும் நூலை எழுதியவர்

அ) றொபேட் நொக்சு ஆ) ஜே.பி லூயிசு

இ) வொன்றிபேர்க் ஈ) தோமசு வான்றி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. போர்ப்படை என்பதைப் பிரித்தால்

அ) போர்ப் + படை ஆ) போர் + படை

இ) போற் + படை ஈ) போற்ப் + படை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) ஓடுஓடு ஆ) எடுஎடு இ) கிடுகிடு ஈ) தேடுதேடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கயிலைவன்னியன் காலத்தில் வன்னி ________________ பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

அ) ஐந்து ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஏழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. நான் + உடன் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) உன்னுடன் ஆ) நானுடன் இ) என்னுடன் ஈ) எனதுடன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. **பழமொழி: குடிப்பது கூழ் கொப்பளிப்பது _______________.**

அ) பன்னீர் ஆ) பந்னீர் இ) பன்நீர் ஈ) பந்நீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. குதிரை என்பது

அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) பலவின்பால் ஈ) ஒன்றன்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. பைல் கோட்டை அமைந்திருந்த இடம்

அ) வெற்றிலைக்கேணி ஆ) ஆனையிறவு

இ) பூநகரி ஈ) கந்தரோடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. **கல்போன்ற நெஞ்சம்** என்ற உவமை அணியில் வந்துள்ள உவமானம்

அ) கல் ஆ) போன்ற இ) நெஞ்சம் ஈ) வலிமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பின்வருவனவற்றுள் சுட்டெழுத்து

அ) ஆ ஆ) எ இ) உ ஈ) யா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. சிலப்பதிகாரக் கதை தொடங்கும் இடம்

அ) பாண்டியநாடு ஆ) சோழநாடு இ) சேரநாடு ஈ) ஈழநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. இல்லறத்தார் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று

அ) கொடை ஆ) மானம் இ) வீரம் ஈ) விருந்தோம்பல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. ஏழை மாணவருக்கு விபுலாநந்தஅடிகள் எவ்வாறு உதவினார்?

___

___

2. விருந்தோம்பல் பற்றிக் கூறும் இரண்டு நூல்களின் பெயர்களைத் தருக.

___

___

3. கயிலைவன்னியன் ஆண்ட வன்னிப் பகுதியின் பெயர் என்ன?

___

4. மருதுபாண்டியன் ஏன் தொடருந்தை நிறுத்தினான்?

___

___

5. மின்மினிப் பூச்சிகள் வாழ்வதற்கேற்ற சூழல் எது?

___

___

6. பூநகரி அகழ்வாராய்ச்சியில் எந்தெந்த நாட்டுக்காசுகள் கண்டெடுக்கப்பட்டன?

___

___

7. தேம்பாவணி என்ற நூலை எழுதிய அறிஞர் யார்?

___

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழு விடை தருக.

கதிரவன் தன் பொற்கதிர்களால் மஞ்சள் நிற வெய்யிலைப் பரப்பியபடி மேற்கு வானில் மெல்லமெல்ல மறையத் தொடங்குகிறான். மாலை வேளையாகிறது. வானம் செக்கச்செவேல் எனச் சிவக்கிறது. மல்லிகையும் முல்லையும் மொட்டவிழ்ந்து மணம் வீசிச் சிரிக்கின்றன. பொய்கையிலே அல்லி மலர்கின்றது. தாமரை குவிகின்றது. புள்ளினங்கள் ஒலியெழுப்பியவாறு தங்கள் கூட்டை அடைகின்றன. மேய்ச்சலுக்குச் சென்ற ஆவினங்கள் கதறிக் கொண்டு வீடுகளை நோக்கிச் செல்கின்றன. தாயின் குரலைக் கேட்ட கன்றுகள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கின்றன. வேலைக்குச் சென்றவர்கள் வீடு திரும்புகின்றனர். அவர்களின் கைகளில் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் இருக்கின்றன. பெண்கள் விளக்கேற்றத் தொடங்குகின்றனர். மாலை நேரம் மனதிற்கு மகிழ்ச்சியான நேரமாகும்.

1. யார் விளக்கேற்றத் தொடங்குகின்றனர்?

______________________________________________

______________________________________________

2. மணம் வீசிச் சிரிப்பன எவை?

______________________________________________

______________________________________________

3. எதைக் கேட்ட கன்றுகள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கின்றன?

______________________________________________

______________________________________________

4. மஞ்சள் நிற வெய்யிலைப் பரப்பியபடி மேற்கு வானில் மெல்லமெல்ல மறையத் தொடங்குபவன் யார்?

______________________________________________

______________________________________________

5. ஒலியெழுப்பியவாறு தங்கள் கூட்டை அடைவன எவை?

______________________________________________

புள்ளிகள் 10

## 4) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வினைமுற்றுகளின் திணை, இடம், காலம் என்பனவற்றைத் தருக.

| | திணை | இடம் | காலம் |
|---|---|---|---|
| நீந்துகின்றன | | | |
| வழங்கினோம் | | | |

2. சொற்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? இயல்புப் புணர்ச்சிக்கு இரண்டு எடுத்துக் காட்டுகள் தருக.

3. தரப்பட்டுள்ள மரபுச் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

ஏறிஏறி :-

பளபள :-

தெருத்தெருவாய் :-

4. அ) வினா எழுத்துகள் எத்தனை?

அ) சொல்லின் முதலில் மட்டும் வரும் வினா எழுத்துகள் எவை?

5. பின்வரும் சொல்லிய வகைகளுக்கு எடுத்துக் காட்டுத் தருக.

மெய்ப்பாட்டுச் சொல்லியம் :-

கூற்றுச் சொல்லியம் :-

புள்ளிகள் 15

5) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து கவிதையை முழுமை ஆக்குக.

## ஆறு

| | | | | |
|---|---|---|---|---|
| பெய்ய | நீரை | வயல்கள் | ஆறாய் | பொழுதும் |

மலையில் இருந்து பாயும் அருவி

மண்ணில் ______________________ ஓடுது

நொடிப் ______________________ நில்லாமல்

நெளிந்து நெளிந்து ஓடுது

வாய்க்கால் வயல்கள் அனைத்திலும்

வாரி ______________________ க் கொட்டுது

ஏரி குளங்கள் நிரம்புது

எங்கும் ______________________ செழிக்குது

மாரி ______________________ மறுத்தாலும்

மண்ணில் நீரை நிறைக்குது

புள்ளிகள் 10

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

I celebrated my birthday. I cut the cake. My family wished me well. My friends too came to my birthday. They gave me presents. I was very happy. I won't ever forget this special day.

Jeg holdt fest på min fødselsdag. Jeg skar også kagen. Min familie lykønskede mig. Mine venner var også med til min fødselsdag. De gav mig gaver. Jeg var meget glad. Jeg glemmer aldrig denne dejlige dag.

Ho festeggiato il mio compleanno. Ho tagliato la torta. I miei famigliari mi hanno fatto gli auguri. Anche i miei amici sono venuti alla mia festa di compleanno. Loro mi hanno dato i regali (di compleanno). Ero molto felice. Non mi dimenticherò mai di questo giorno così speciale.

Ik heb mijn verjaardag gevierd. Ik heb de taart gesneden. Mijn familie heeft me gefeliciteerd. Mijn vrienden kwamen ook naar mijn verjaardag. Ze gaven mij cadeaus. Ik was heel erg blij. Ik zal deze speciale dag nooit vergeten

Jag firade min födelsedag. Jag skar tårtan. Min familj gratulerade mig väl. Mina vänner kom också till min födelsedag. De gav mig presenter. Jag var väldigt glad. Den här speciella dagen kommer jag aldrig glömma.

Jeg feiret min fødselsdag. Jeg delte opp kaken. Min familie ønsket meg til lykke. Vennene mine kom til min fødselsdag også. De gav meg presanger. Jeg ble veldig glad. Jeg vil aldri glemme denne spesielle dagen.

Ich feierte meinen Geburtstag. Ich schnitt einen Kuchen. Meine Familie gratulierte mir herzlichst. Meine Freunde kamen auch zu meinem Geburtstag. Sie gaben mir Geschenke. Ich war sehr glücklich. Ich werde nie diesen besonderen Tag vergessen.

J'ai fêté mon anniversaire. J'ai coupé mon gâteau. Ma famille m'a souhaité de bon cœur et mes amis sont venus à mon anniversaire. Ils m'ont offert des cadeaux et j'étais très heureux. Je n'oublierai jamais cette formidable journée.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- கயிலைவன்னியன்
- எனது தாய்மொழி
- கத்தரித் தோட்டத்துக் காவலன்

புள்ளிகள் 20